


**26.08.2024**

**தலைப்புச் செய்திகள்**

- இந்தியா - சிங்கப்பூர் நாடுகளிடையே அமைச்சர்கள் நிலையிலான உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் இன்று சிங்கப்பூரில் தொடங்குகின்றன.
- லடாக் யூனியன் பிரதேசத்தில் 5 புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டதன் மூலம் வளமும், ஆளுமையும் மேம்படும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- ஜென்மாஷ்டமி இன்று பக்தி சிரத்தையுடனும், உற்சாகத்துடனும் கொண்டாடப்படுகிறது.
- சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் 116 கோடி ரூபாய் மதிப்பிலான 6 புதிய திட்டப்பணிகளுக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டியுள்ளார்.
- காத்மண்டுவில் நடைபெறும் தெற்காசிய கால்பந்து சாம்பியன் பட்ட போட்டியின் அரையிறுதியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

**********

**இந்தியா - சிங்கப்பூர் அமைச்சர்கள் கூட்டம்**

இந்தியா - சிங்கப்பூர் நாடுகளிடையிலான வர்த்தக பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் வகையில், அமைச்சர்கள் நிலையிலான பேச்சுவார்த்தைகள் சிங்கப்பூரில் இன்று தொடங்குகின்றன.

மத்திய அமைச்சர்கள் திருமதி நிர்மலா சீதாராமன், திரு.பியூஷ்கோயல், டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், திரு.அஸ்விணி வைஷ்ணவ் உள்ளிட்டோர் இந்த வட்ட மேஜை பேச்சுவார்த்தையில் பங்கேற்கின்றனர்.

முன்னதாக அமைச்சர்கள் சிங்கப்பூர் அதிபர் **தர்மன் சண்முக ரத்தினத்தையும், பிரதமர் லாரன்ஸ் வாங்கையும்** இன்று சந்தித்து நம் நாட்டு தலைவர்களின் வாழ்த்துக்களை பரிமாறிக்கொண்டனர்.

இந்திய – சிங்கப்பூர் அரசியல் பங்களிப்பை முன்னெடுத்துச்செல்வதில் அதிபர் தர்மன் சண்முக ரத்தினத்தின் வழிகாட்டுதல்களை இந்தியா வரவேற்பதாக டாக்டர் எஸ் ஜெய்சங்கர் தமது சமூகவலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

**இப்பேச்சுவார்த்தைகளுக்கு அந்நாட்டு பிரதமர் வோங்கின்** தொடர் நடவடிக்கைகளையும் அமைச்சர்கள் பாராட்டினர்.

இருநாடுகளுக்கிடையிலான இந்த பேச்சுவார்த்தை மூலம் இருதரப்பு உறவுகளை அடுத்த கட்டத்திற்கு முன்னெடுத்துச்செல்வதோடு நிதி தொழில்நுட்பம், பசுமை பொருளாதாரம், பசுமை ஹைட்ரஜன், திறன்மேம்பாடு, உணவு பாதுகாப்பு, மின்னணு பங்களிப்பு போன்றவற்றிற்கு உயர் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக அமைச்சர்கள் தத்தம் துறை சார்ந்த அந்நாட்டு அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கின்றனர்.

**********

**அமித்ஷா**

லடாக் யூனியன் பிரதேசத்தில் 5 புதிய மாவட்டங்கள் உருவாக்கப்படுவதாக மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

**ஸான்ஸ்கர், ட்ராஸ், ஷாம், நுப்ரா, ச்சங்தாங்** ஆகிய இந்த 5 மாவட்டங்கள் உருவாக்கப்பட்டதற்கு பாராட்டு தெரிவித்துள்ள பிரதமர் திரு.நரேந்திரமோடி, இதன்மூலம் இப்பகுதியில் ஆளுமையும், வளமும் அதிகரிக்கும் என்றார்.

மக்களுக்கு சேவைகள் கிடைப்பதை இது உறுதி செய்யும் என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக சமூக வலைதளத்தில் இதுகுறித்து தெரிவித்த மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா லடாக் மக்களுக்கான வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

**********

**ஐ.என்.எஸ்.**

இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ். மும்பை போர்கப்பல் இலங்கை கொழும்புவில் 3 நாள் கூட்டு பயிற்சிகளை மேற்கொள்ள இன்று அங்கு சென்றடைந்தது.

இலங்கை விமான படையால் இயக்கப்படும் டார்னியர் கடல் ரோந்து விமானங்களுக்கு தேவையான உதிரி பாகங்களை இப்போர்கப்பல் வழங்கும்.

கடல்சார் பயிற்சிகள், விளையாட்டு நிகழ்வுகள், யோகா அமர்வுகள், தூய்மை பணிகள் உள்ளிட்ட பணிகளை அந்நாட்டு கடற்படையினருடன் இணைந்து ஐ.என்.எஸ். போர்கப்பல் மேற்கொள்கிறது.

**********

**சக்தி காந்த தாஸ்**

இந்தியாவின் GEM, UPI, ULI ஆகிய முப்பெரும் மின்னணு பண பரிவர்த்தனை திட்டங்கள் நாட்டின் டிஜிட்டல் துறை புரட்சியை பிரதிபலிப்பதாக ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு.சக்தி காந்த தாஸ் தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் டிஜிட்டல் தொழில்நுட்பம் தொடர்பான சர்வதேச மாநாட்டில் இன்று துவக்க உரையாற்றிய அவர், ULI தொழில்நுட்ப தளம், தடையில்லா பண பரிவர்த்தனைக்கு பயனளிப்பதாக கூறினார்.

தற்போதைய மின்னணு பண பரிமாற்ற சூழல்கள் விரைவாகவும், அதேவேளையில் பாதுகாப்பாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

UPI முறை பண பரிவர்த்தனைகளை மிகவும் இலகுவாக்கியுள்ளதாக எடுத்துரைத்தார்.

இந்த பண பரிவர்த்தனை முறைகளால் ரிசர்வ் வங்கி தற்போது ஒருங்கிணைந்த கடன் வழங்கும் திட்டத்திற்கு தயாராக இருப்பதாக கூறினார்.

ULI பண பரிவர்த்தனை முறை சிறு குறு வணிகர்களுக்கு பயனளிக்கும் என்பதோடு அதன் தரவுகள் பாதுகாப்பாக இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

**********

**இந்தியா பிரேசில் கூட்டம்**

இந்தியா - பிரேசில் வெளியுறவு அமைச்சர்கள் நிலையிலான 9ஆவது கூட்டு ஆணைய பேச்சுவார்த்தைகள் புதுதில்லியில் இன்று நடைபெற உள்ளன.

பிரேசில் வெளியுறவு அமைச்சர் Mauro Vieira,-வும்,

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கரும் இதில் பங்கேற்று இருநாடுகளுக்கிடையேயான பாதுகாப்பு, ஒத்துழைப்பு பல்வேறு துறை திட்டங்கள் உள்ளிட்டவை குறித்து ஆலோசனை மேற்கொள்கின்றனர்.

இந்தியாவின் ஜி-20 தலைமைத்துவத்தின் போது எட்டப்பட்ட பல்வேறு முடிவுகளை முன்னெடுத்துச்செல்வது குறித்து இதில் விவாதிக்கப்படுகிறது.

திரு.வியர்ராவின் இந்திய பயணம் இரு நாடுகளுக்கிடையிலான அரசியல் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதோடு, இருதரப்பு, பிராந்திய, பன்முக துறைகளில்

புதிய வாய்ப்புகளை ஆராய வழிகோலும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**********

**கிருஷ்ணஜெயந்தி**

கிருஷ்ண பகவான் அவதரித்த ஜென்மாஷ்டமி நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று பக்தி சிரத்தையுடனும், உற்சாகத்துடனும் கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி ஸ்ரீகிருஷ்ணர் திருக்கோவில்களில் திரண்ட ஏராளமான பக்தர்கள், சுவாமி தரிசனம் செய்தனர்.

கிருஷ்ணர் அவதரித்த உத்திரபிரதேசம் மாநிலம் மதுரா நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளன.

மதுராவில் உள்ள ஸ்ரீகிருஷ்ண ஜன்பூமி திருக்கோவிலில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பக்தி சிரத்தையுடன் இன்று அதிகாலை முதலே சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

இந்நாளை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு,
குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர்,
பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் நாட்டு மக்களுக்கு உளம் கனிந்த கிருஷ்ண ஜெயந்தி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

**தமிழ்நாட்டில் கிருஷ்ண பெருமான்** ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள் இன்று நடைபெறுகின்றன.

**விழுப்புரம் மாவட்டம் மருதூர் கிருஷ்ணன்** கோவில் உறியடி விழாவில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

**நெல்லை அருகன்குளம் ஸ்ரீ கோபால** கிருஷ்ணன் கோவிலில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி** திருக்கோவிலில் கிருஷ்ண ஜெயந்தியை ஒட்டி உறியடி கண்டருளல் நிகழ்வு நாளை மறுநாள் நடைபெறுகிறது.

**********

**முதலமைச்சர்**

சென்னை பெரு நகர வளர்ச்சி குழுமம் சார்பில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 115 கோடியே 58 லட்ச ரூபாய் மதிப்பிலான 6 புதிய திட்டப்பணிகளுக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் **காணொலி மூலம்** சென்னையில் இன்று அடிக்கல் நாட்டினார்.

மேலும் 5 கோடியே 22 லட்ச ரூபாய் மதிப்பிலான 4 முடிவுற்ற பணிகளையும் அவர் தொடங்கிவைத்தார்.

கொளத்தூர் பகுதியில் 53அரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான வண்ணமீன் சந்தை அமைத்தல்,
ராயபுரம் மூலகொத்தளத்தில் புதிய சமுதாய நலக்கூடம்,
புரசைவாக்கத்தில் நவீன சலவைக்கூடம்,
புழல் ரெட்டேரி கொளத்தூர் ஏரிக்கரைகளை மேம்படுத்துதல் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

அயனாவரம் நவீன சலவைக்கூடம், மூன்று நியாயவிலைக்கடைகள்,
கொளத்தூர் உணவு பொருள் வழங்கல், மண்டல உதவி ஆணையர் அலுவலகம்,
புதிய வட்டாச்சியர் அலுவலகம் உள்ளிட்டவற்றையும் முதலமைச்சர் காணொலி மூலம் திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநில அமைச்சர்கள் திரு.கே.என்.நேரு, திரு.க.பொன்முடி, திரு.சேகர்பாபு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**********

**ரயில் ரத்து**

உதகை மேட்டுப்பாளையம் இடையேயான மலை ரயில் சேவை வரும் 31ஆம் தேதி வரை ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இப்பாதையில் மண் சரிவு மற்றும் பாறைகள் விழுந்ததில் தண்டவாளங்கள் சேதமடைந்ததை அடுத்து இப்பகுதிகளில் சீரமைப்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதை அடுத்து இந்நடவடிக்கை.

**********

**சாலை பாதுகாப்பு**

திருவண்ணாமலையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் இன்று நடைபெற்றன.

தலைகவசம் அணிய வேண்டும், குடிபோதையில் வாகனத்தை இயக்க கூடாது போன்றவற்றை இதில் வலியுறுத்தப்பட்டது.

விபத்தில்லா சாலை குறித்த உறுதிமொழியை போக்குவரத்து காவலர்களும், பள்ளி மாணாக்கரும் ஏற்றுக்கொண்டனர்.

**********

**நாமக்கல்**

நாமக்கல் மாவட்டம் பொம்மை குட்டைமேடு பகுதியில் போலியோ இல்லா உலகை ஏற்படுத்தும் நோக்கில் மூன்றாயிரம் மாணாக்கர் பங்கேற்ற சிலம்ப போட்டி இன்று நடைபெற்றது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

**********

**இருவரி**

**திருச்சி மண்டல தொழிலாளர் வருங்கால** வைப்பு நிதி நிறுவனம் சார்பில் குறைதீர் கூட்டம் இம்மண்டலத்திற்குட்பட்ட திருச்சி புதுக்கோட்டை பெரம்பலூர் கரூர் திருவாரூர் உள்ளிட்ட 12 மாவட்டங்களில் நாளை நடைபெறுகிறது.

**சிவகங்கை மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும்** மலைப்பயிர்கள் சார்பில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பதற்கு 40 சதவிகித மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படுவதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் கூறியுள்ளார்.

**புதுக்கோட்டை மாவட்டம் மேலபனையூர், நாகுடி,** நம்பம்பட்டி ஆகிய இடங்களில் மக்களுடன் முதல்வர் முகாம் நாளை நடைபெறுகிறது.

**பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்** நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் கூறியுள்ளார்.

**திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி வடுவூர்** புதுக்கோட்டையில் நடைபெற்ற தென்னிந்திய அளவிலான கபடி போட்டியில் கேரள அணி முதல் பரிசையும், சேலம் அணி 2ஆவது பரிசையும் வென்றுள்ளன.

**********

**வேளாங்கண்ணி**

வேளாங்கண்ணி பேராலய ஆண்டு திருவிழா வரும் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்குவதால் முன்னேற்பாட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

**பூண்டி**

இதனிடையே பூண்டிமாதா பேராலயத்தில் மரியன்னை பிறப்பு பெருவிழா வரும் 30ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

விழாவின் முக்கிய நிகழ்வான தேர்பவனி அடுத்த மாதம் 8ஆம் தேதி நடைபெறும்.

**********

**தேனி**

தேனி பெரியகுளம் கும்பக்கரை அருவியில் நீர்வரத்து சீரானதை அடுத்து சுற்றுலா பயணிகள் அருவியில் குளிக்க வனத்துறை அனுமதி அளித்துள்ளது.

**********

**விபத்து**

திருப்பூர் இடுவம்பாளையம் சாலையில் உள்ள தனியார் பனியன் நிறுவனத்தில் நள்ளிரவு நேரிட்ட தீ விபத்தில் துணிகள் இயந்திரங்கள் உள்ளிட்ட பல லட்ச ரூபாய் மதிப்பிலான பொருட்கள் தீக்கிறையாயின.

விபத்து குறித்து திருப்பூர் காவல்துறையினர் வழக்க பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

**********

## njd;fhrp

njd;fhrp khtl;lk; gz;nghop fhpry; Fsk; gFjpapy; tpisepyq;fSf;Fs; cyh tUk; ahidia fhl;bw;Fs; tpul;Lk; Kaw;rpapy; tdj;JiwapdH <Lgl;Ls;sdH

**********

## வானிலை

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக தமிழகத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பரவலாக லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மன்னார் வளைகுடா, தென் தமிழக கடலோரம், குமரிக்கடல், வங்ககடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் வரும் 30ஆம் தேதிவரை இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

**********

## கால்பந்து

காத்மண்டுவில் நடைபெறும் 20 வயதிற்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் பட்ட போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

இறுதி போட்டி வரும் புதன்கிழமை நடைபெறும்.

**********

## டென்னிஸ்

U.S. ஓப்பன் கிரான்ஸ்லாம் டென்னிஸ் போட்டிகள் நியூயார்க்கில் இன்று தொடங்குகின்றன.

வரும் 8ஆம் தேதிவரை நடைபெற உள்ள இப்போட்டிகளில் இந்தியாவின் சுமித்நாகல், ரோஹன் போபன்னா, யூக்கி பாம்ப்ரி, ஸ்ரீராம்பாலாஜி உள்ளிட்டோர் களமிறங்குகின்றனர்.

இந்தாண்டின் நான்கு கிரான்ஸ்லாம் போட்டிகளிலும் பங்கேற்கும் முதல் இந்திய வீரர் என்ற பெருமையை **சுமித் நாகல்** பெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

ரோஹன் போபண்ணா - ஆஸ்திரேயாவின் எப்டன் இணை ஆடவர் இரட்டையர் சுற்றில் களமிறங்குகிறது..

**********

## பாராலிம்பிக்ஸ்

பாரீஸ் பாராலிம்பிக்ஸ் போட்டிகள் நாளை மறுநாள் தொடங்குகின்றன.

அடுத்த மாதம் 8ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டிகளில் இந்தியாவின் சார்பில் 84 வீர வீராங்கனைகள் களமிறங்குகின்றனர்.

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

**********